Date 21.12.21 C.C.No. 40 /2018

அ.சா.1 உமாமகேஸ்வரி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

எனக்கும் 1வது எதிரிக்கும் 2012ல் திருமணம் நடந்தது ஏ்னறால் சரிதான். அந்த திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். என் கணவரின் வீடு பொட்டப்பட்டி என்றால் சரிதான். அது ஒரு 6, 7 பேர்கள் தங்கும் சின்னவீடுதான் என்றால் சரிதான். எதிரிகள் அணைவரும் என் திருமணம்திற்கு வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தனர். பின்பு அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் எங்களுடன் தங்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி என் கணவர், 2வது எதிரி என் நாத்தனார் கணவர் என்றால் சரிதான். 2, 3 வது எதிரிகள் என் கணவரின் அத்தை மகன்கள் என்றால் சரிதான். 5வது எதிரி என் நாத்தனார் என்றால் சரிதான். 4, 6 எதிரிகள் 1-வது எதிரிக்கு அத்தைகள் என்றால் சரிதான். அவர்கள் வீடு எங்கள் வீட்டிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் தனி சமையல் மற்றவர்கள் தனி தனி சமையல் என்றால் சரிதான். 1-வது எதிரிக்கு அழகு என்பவர் தாயார் என்றாலும், செல்லத்துரை என்பவர் மூத்த அண்ணன் என்றாலும், மீனாட்சி, சுந்தரி 1-வத எதிரியின் சகோதரிகள் என்றாலும் சரிதான். அவர்களை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் வீட்டிற்கும் என் பெற்றோர் வீட்டிற்கும் 3 கி.மீ. தொலைவு என்றால் சரிதான். நான் தற்போது மகளிர் சுயஉதவி குழுவில் ஒருங்கிணைப்பாளராக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். திருமணத்தின்போத எனக்கு வேலை இல்லை என்றால் சரிதான். என் கணவர் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் திருமணம் முடிந்தவுடன் என் கணவர் பெயரிலுள்ள கூட்டு குடும்ப சொத்தை என் பெயரில் எழுதிவைக்க கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. 1-வது எதிரியின் தாத்தா காடன் என்பவர் 8 ஏக்கர் 32 சென்ட் இடத்தை தான செட்டில்மென்டாக அவரது வாரிசுகளுக்கு எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த தான செட்டில்மென்ட் சின்னன், பிச்சன், மீனாட்சி, சின்னம்மாள், காடியம்மாள், பிச்சம்மாள், ஈசியம்மாள் ஆகியோர்களுக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் என் கணவரின் தகப்பனார் பிச்சன் 2-வது வாரிசு என்றால் சரிதான். இந்த தான செட்டில்மென்ட் தெரியாமல் மொத்த சொத்தையும் என் பெயரில் எழுதச்சொல்லிதான் பிரச்சனை என்றால் சரியல்ல. நான் வாழ்க்கைப்பட்டுபோன வீட்டில் கதவு இல்லை என்றால்

சரிதான். அதை சரி செய்வதற்கு என்னிடம் 5 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கினார் என்றால் இல்லை, வீட்டை பூசுவதற்கு 1 லட்சம் பணம் வாங்கினார். எனக்கு பண விசயத்தில் என் கணவருடன் பிரச்சனை ஏற்பட்டதால்தான் நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் பணமும் பிரச்சனையாக இருந்தது, வேறு தொந்தரவும் செய்தனர். 12 பவுன் நகையும், 1லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான சீதனப்பொருட்கள் எனக்குதான் கொடுத்தனர் என்றால் சரிதான். அந்த நகையை என் கணவர் போர் போடுவதற்காக கேட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் என் கணவர் கேட்கவில்லை, 6-வது எதிரி ஈசம்மாள்தான் கேட்டார், நான் கொடுக்க மறுத்துவிட்டேன். 6வது எதிரி எந்த தேதியில் இடத்தில் நகையை கேட்டார் என்றால் 6வது எதிரி ஈசியம்மாள் கேட்கவில்லை, 4வது எதிரி காடியம்மாள்தான் கேட்டார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுககவில்லை என்றால் சரிதான். இந்த புகாரிலும் காடியம்மாள் நகையை கேட்டார் என்று எந்த தேதியில ் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விசயத்தை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கர்ப்பத்தை கலைக்க சொன்னதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில், யார் முன்னிலையில் என் கர்ப்பத்தை கலைக்க சொன்னார் என்றால் கணவன் மனைவி என்ற முறையில் நாங்கள் தனியாக பேசிக்கொண்டோம். விளையாட்டாக பேசிய விசயத்தை 4 வருடங்கள் கழித்து வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மற்றவர்கள் தூண்டியதன்பேரில் 1-வது தேதி, இடம், நேரம் என்ன என்றால் தெரியாது. சமரசம் எந்தெந்த தேதியில் பேசினார்கள் எனறு என் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் நிறையமுறை பேசியுள்ளார்கள், குறிப்பிட்டு சொல்ல இயலாது. நான் கணவருக்கு 1 லட்சத்து 5 ஆயிரம் கொடுத்ததாக சொன்னது நான் கடனாக வாங்கி கொடுத்த பணம் என்றால் சரிதான். நான் அந்த பணத்தை நான் கணவருக்கு வாங்கி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கணவரிடம் அந்த பணத்தை கொடுத்ததற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் காவல் நிலையத்தில் என் கணவர் எழுதி கொடுத்துள்ளார். நான் கடன் வாங்கிய தேதி, இடம் , நேரம் குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மலைஅடிவார வீட்டில் என்னை என் கணவர் விட்டுவிட்டு சென்றதாக சொல்லியுள்ளதில் என் கணவரை தேடினேனா என்றால் நான் பயந்துகொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் தேடவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் கொடுக்கவில்லை. என் கணவரை தேடவேண்டும் என்று தோன்றியதா என்றால் சரிதான். புகாரில் நான் போட்ட கையெழுத்து 19.10.16ல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக 12.09.16ல் என் கணவர் நான் உடனடியாக வீட்டிற்கு திரும்ப வரவேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். நான் 20.09.16ல் என் வழக்கறிஞர்மூலம் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பின்புதான் இந்த புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பாக மகளிர் காவல் நிலையத்தில் 2014ல் புகார் கொடுத்திருந்தேன். அதற்கு நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாதான். மேற்சொன்ன விவரம் பொய் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் என் கணவர் எச்.எம்.ஓ.பி. 97-17 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் என்னை அவருடன் சேர்ந்து வாழச்சொல்லி 17.01.18ல் உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். நான் ஒருவருடங்களாக சேர்ந்து வாழ செல்லாததால் எச்.எம்.ஓ.பி. 147-19 என்று விவாகரத்து கோரி என் கணவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். நான் வாழ்க்கை பொருளுதவி கேட்டு இந்நீதிமன்றத்தில் எம்.சி.2-17 என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் துண்புறுத்த விரும்பவில்லை என்றாலும், அ.சா.4 பழனியப்பனின் பேச்சை கேட்டு என் வாழ்க்கையை கெடுத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றால் எனக்குரிய பணத்தை திரும்ப செலுத்தினால் தயார். 1-வது எதிரி நான் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக இருந்தால் மேற்படி பணத்தை கட்ட தயாரா இருக்கிறார். 4-வது எதிரியிடமிருந்து நான் விலகி இருக்கவேண்டும் என்றால் யோசித்து சொல்கிறேன். 1-வது எதிரி கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காக நான் மற்ற எதிரிகள்மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் ஏ்னறால் சரியல்ல. 1-வது எதிரிமீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Date 21.12.21                                    C.C.No. 40 /2018

அ.சா.3 பாக்யலெட்சுமி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் அ.சா1 ன் தாயார் என்றால் சரிதான். நான் 12 பவுன் நகை மற்றும் 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான சீதன பொருட்களை என் மகளுக்கு தான் கொடுத்தேன் என்றால் சரிதான். 1வது எதிரி என் அப்பாவிடமிருந்து என் மகன் மூலமாக 1 லட்சத்து 5000 கடன் வாங்கினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போர் போடுவதற்காக எதிரிகள் என் மகனிடம் நகையை கேட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மகள் அவரது கணவரின் கூட்டுக்குடும்ப சொத்தை எழுதி கேட்டதால் தான் பிரச்சனை என்றால் சரியல்ல். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

Date 21.12.21 C.C.No. 40 /2018

அ.சா.4 பழனியப்பன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

திருமணத்திற்கு முன்பாகவே 1வது எதிரி சொத்தை மற்ற எதிரிகள் வரவு செலவு கணக்கு பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் என் பேத்திக்கு நடந்த பிரச்சனை பற்றி பேசாம்ல் 1வது எதிரியின் சொத்தை பற்றி பேசியதால் எனக்கு அவர்கள் சொத்தை பற்றிதான் அக்கறை என்றால் சரிதான். என் மகளும் மருமகளும் என் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார்கள் என்றால் 1 பரலாங் தொலைவு இருக்கும். அ்.சா.1 என்னுடன் இருக்கிறார் என்றால் அவள் அம்மாவுடன் இருக்கிறார். பணம் கொடுத்ததிற்கு நான் எந்த ஆதாராமும் கொடுக்கவில்லை என்றால் பேத்திக்கு கொடுத்ததால் எந்த ஆதாராமும் எழுதி வாங்கவில்லை. போர் போடுவதற்கு நகை கேட்டதாக எந்த ஆதராரமும் இல்லாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2014ல் நான் என் பேத்தியை கடத்தி வைத்துக்கொண்டு வாழ விடாமல் செய்கிறேன் என்ற 1வது எதிரி மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்து கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் 1வது எதிரி என் பேத்தியை அழைத்து செல்லாததால் தான் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்று என் முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். 1வது எதிரி அ.சா1 யை எந்த துண்புறுத்தலும் செய்யவில்லை என்றாலும் என் பேத்தியை அழைத்து செல்லாததால்தான் இந்த புகார் என்றால் சரியல்ல. 1வது எதிரி அ.சா1 உடன் சேர்ந்து வாழ தற்பொழுதும் தயாராக இருக்கிறாரா என்றால் அதுபற்றி எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை.